**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 84/2022

பெயர் : அன்பரசன் (DW3) (Cross )

த/க/பெ. :

தேதி :27.01.2026

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ரவீந்தின் வாஞ்சிநாதன் மீது வழக்கு போட்டுள்ளார். இடத்தை ஆக்கிரத்துள்ளார் என்பதால் வழக்கு போட்டுள்ளார். சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் தெரியாது. நான்கெல்லை தெரியாது. 2ம் பிரதிவாதியை 10 ஆணடுகளுக்கு மேலாக தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை 2ம்பிரதிவாதி கூறினார் என்றால் சரிதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் அம்முனியம்மாள் உயில் எழுதிய தாக சொல்லி உள்ளேன் அதை நான் பார்க்கவில்லை. நான் 1990 ல் பிறந்தேன். ராஜலெட்சுமிக்கு உயில் எழுதி வைத்துள்ளார். உயிலை குறித்து எனக்குநேரடியாக தெரியாததாலும் அதை நான் பார்த்ததில்லை என்றாலும் அதை குறித்து நான் சாட்சியம் அளிக்க இலயாது என்றால் சரியல்ல. 45/4 ஏ 1 சொத்தில் 2ம்பிரதிவாதி செட் போட்டுள்ளார். அதற்கான ஆவணத்தை நான் பாத்துள்ளேன். அதற்கான பத்திரம் பார்த்துள்ளேன். குமாரசாமியிடம் இருந்து 2ம்பிரதிவாதி வாங்கி உள்ளார். தேதி தெரியவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் எந்த தேதியில் வாங்கினார் என்று சொல்லவில்லை. நான் போஸ்ட் மேனாக உள்ளேன். வருவாய் துறையில் வேலை செய்யவில்லை. எந்த ஆவணத்தின் அடிப்பைடிடயில் வீடு கட்டிய சர்வே நம்பரை சொல்கிறேன் என்றால் ஆவண்தை பார்த்து தான் சொல்கிறேன். ஆவணத்தின் அடிப்படையில் அடுத்தடுத்த இடங்களை அடையாளம் காட்ட இயலுமா என்றால் தெரியாது. 45/4 ஏ 1 சொத்தில் அவர் வீடு கட்டியுள்ளார் என்பது எனக்குநேரடியாக தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில்

2 ம்பிரதிவாதி ஆக்கிரமித்து செட் போட்டுள்ளார் என்றாலும் அதை மறைத்து ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.